**கவனிக்க.**-2024.05.22 ஆந் திகதிய இல.2386 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை..

**கவனிக்க.**- இவ் வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான கேகாலை மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று தமிழ் , சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2387 - 2024 මැයි මස 31 වැනි සිකුරාදා - 2024.05.31

2387 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1340 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1342 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1343 |
| அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| ஏல விற்பனைகள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


1339 - B 082575 - 5,403 (2024/05)

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம்- சாவகச்சேரி

## நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படததுமான பொருட்களை ஏல விற்பனை செய்தல்

*சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்டு உரிமை கோரப்படாத பொருட்கள் 2024.06.08 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.*

*1.பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின், ஏலவிற்பனைக்கு குறிப்பிட்ட தினத்தில் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.*

*2.நீதி மன்றப்பதிவாளரின் அனுமதி பெற்று ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்னர் ஏலவிற்பனைக்கென குறிப்பிட்ட பொருட்களைப் பார்வையிடலாம்.*

*3. நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் தகுந்த தொகையானது விற்பனையின் போது ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பத்தில், மன்றின் விருப்பு உரிமையின் பிரகாரம் அப்பொருட்களை ஏல விற்பனையிலிருந்து நீக்கிவிடுவதற்கான உரிமையை மன்று கொண்டுள்ளது.*

*4. ஏல விற்பனையின் போது ஏலத்தில் வாங்கப்பட்ட பொருட்கள் உடனடியாக பணம் செலுத்தப்பட்டு நீதிமன்ற வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*6. பொருட்களை ஏலத்தில் கோருபவர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆளடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.*

*ஏ. ஜூட்சன்,*
*மேலதிக நீதிவான்.*

*நீதிவான் நீதிமன்றம்,*
*சாவகச்சேரி.*

### நீதிமன்றத்தால் அரசுடமையாக்கப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்களின் பட்டியல்

| தொ. இல. | வழக்கு இல. | வாகன இலக்கம் | வாகன வகை |
|---|---|---|---|
| 1 | A/50/20 | NP BGX 2922 | மோட்டார் சைக்கிள் |
| 2 | AR/643/20 | NP MC 0038 | மோட்டார் சைக்கிள் |
| 3 | AR/447/21 | NP BHA 7739 | மோட்டார் சைக்கிள் |
| 4 | AR/451/21 | NP GY 4278 | மோட்டார் சைக்கிள் |
| 5 | AR/666/21 | NP HH 0804 | மோட்டார் சைக்கிள் |
| 6 | AR/667/21 | NP WB 4994 | மோட்டார் சைக்கிள் |
| 7 | AR/16/19 | WP XQ 2628 | மோட்டார் சைக்கிள் |
| 8 | AR/323/19 | NP VX 1913 | மோட்டார் சைக்கிள் |
| 9 | AR/30/22 | NP XJ 9879 | மோட்டார் சைக்கிள் பாகங்கள் |
| 10 | 25230 | NP WJ 4330 | மோட்டார் சைக்கிள் |
| 11 | 21141 | NP MW 8588 | மோட்டார் சைக்கிள் |
| 12 | AR/55/20 | EP JN 7880 | மோட்டார் சைக்கிள் |
| 13 | AR/54/20 | NP WX 4400 | மோட்டார் சைக்கிள் |
| 14 | AR/51/20 | NP ML 8887 | மோட்டார் சைக்கிள் |
| 15 | AR/43/20 | NP MV 4487 | மோட்டார் சைக்கிள் |
| 16 | AR/53/20 | NP TZ 0899 | மோட்டார் சைக்கிள் |

| தொ. இல | வழக்கு இல. | வாகன இலக்கம் | வாகன வகை |
|---|---|---|---|
| 17 | 21044 | NP MH 1686 | மோட்டார் சைக்கிள் |
| 18 | AR/269/18 | WP HT 7129 | மோட்டார் சைக்கிள் |
| 19 | 17452 | NP PW 1328 | இரட்டைப்பாவனை வாகனம் ( பட்டா) , |
| 20 | 17734 | WP JC 0459 | டிப்பர் வாகனப் பாகங்கள் |
| 21 | 17223 | WP AAJ 2275 | முச்சக்கர வண்டி |

05-297

---

## நீதிவான் நீதிமன்றம்- களுவாஞ்சிக்குடி

## பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் அரசுடமையாக்கப்பட்டதுமான பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2024.06.08 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன்அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

J.B.A. றஞ்சித் குமார்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
களுவாஞ்சிக்குடி,
2024.05.15.

### ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்

| இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | துவிச்சக்கர வண்டி | 07 |
| 2. | கையடக்கத் தொலைபேசி (I phone) | 01 |
| 3. | சிலிண்டர் | 03 |
| 4. | மின்கலம் 12V | 04 |
| 5. | சவள் | 20 |

| இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 6. | இரும்புச் சட்டி | 17 |
| 7. | பெரிய பானை | 14 |
| 8. | பானை | 14 |
| 9. | குடம் | 01 |
| 10. | அடுப்பு | 03 |
| 11. | கோடாரி | 04 |
| 12. | மேசை தராசு | 02 |
| 13. | இலத்திரனியல் தராசு | 01 |

05- 298

## ஆய விற்பனையும் குத்தகையும்

### மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவு

### கள்ளுத் தவறணைக்கான குத்தகை விற்பனை 2024 யூலை - 2025 யூன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 1982ஆம் ஆண்டின் கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி கள்ளுத்தவறணைக்கான 2024ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2025, யூன் மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளு விற்கும் பிரத்தியேக உரிமைக்கு கேள்வி விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்ட திகதி, நேரம் வரை மண்முனைப்பற்று, ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விதாரர்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் நடாத்தப்படும் கேள்விச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

1. கேள்வி விண்ணப்பங்களின் பேரில் ஆயிரத்து ஐநூறு ரூபா (ரூபா 1500.00) பணத்தை ஆரையம்பதி பிரதேச செயலாளரின் பெயரில் செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பப்படிவத்தை பெறமுடியும். இக் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்படும்போது இப்பற்றுச்சீட்டும் இணைக்கப்பட்டிருத்தல் அவசியமாகும். கேள்விப்பத்திர விநியோகம் 2024.05.31ஆந் திகதி முதல் 2024.06.14 ஆந் திகதி பிற்பகல் 3.00 மணியுடன் முடிவடையும்.

2. அந்தந்த பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் பெறுமதிச் சான்றிதழானது கேள்விதாரர் விண்ணப்பிக்கும் தொகையில் 15% வீதத்திற்கு குறைவாக இருத்தலாகாது. இப்பெறுமதிச் சான்றிதழ் கேள்விப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்கள் பிழையாக நிரப்பப்பட்டிருந்தால் அவை நிராகரிக்கப்படும்.

4. கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காது கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணத்தை திருப்பி எடுக்க விரும்பினால் தங்களின் கோரிக்கையை கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நாளில் இருந்து இரண்டு வாரங்களுக்குள் தாங்கள் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களை பூரணப்படுத்தாது பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டுடன் திருப்பி சமர்ப்பித்தால் அக்கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

5. தவறணை தற்போது இருக்கும் இடத்தில் தொடர்ந்தும் இருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

6. பதிவு செய்யப்பட்ட தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த குத்தகை விற்பனையில் கலந்து கொள்வதாயின் சங்கம் அமைந்திருக்கும் பிரதேசத்திற்குரிய கள்ளுத் தவறணைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். அத்துடன் சங்கம் தற்போது இயங்குகின்றமை பற்றியும் சங்கத்தால் கள்ளுத்தவறணையை குத்தகைக்கு எடுத்து நடாத்தக்கூடிய ஆற்றல் உள்ளமை பற்றியும் மட்டக்களப்பு மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கும் பட்சத்திலேயே குத்தகை விற்பனைக்கான விண்ணப்பப்படிவம் வழங்கப்படும். ( நிதி அமைச்சின் 01/2012 ஆம் இலக்கம் கொண்ட 2012.01.05 ஆந் திகதிய சுற்றுநிருபத்திற்கமைவாக காணப்படுதல் வேண்டும்.)

7. ஏனைய விபரங்கள் ஆரையம்பதி பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(திருமதி) தெட்சணகௌரி தினேஷ்,
பிரதேச செயலாளர்,
மண்முனைப்பற்று.

பிரதேச செயலகம்,
மண்முனைப்பற்று,
2024,மே 22.

**கள்ளுத் தவறணை அமைய வேண்டிய இடம்**

| கள்ளுத் தவறணைக்குரிய பிரதேச செயலகப் பிரிவு | தவறணை அமைய வேண்டிய இடம் | கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியும் நேரமும் | |
|---|---|---|---|
| | | திகதி | நேரம் |
| மண்முனைப்பற்று | ஆரையம்பதி தெற்கு கிராம அலுவலர் பிரிவு | 2024.06.19 | பி.ப. 1.30 மணி |

**குறிப்பு.**- 1. கேள்விச் சபை 2024.06.19ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்குக் கூடும்.

2. விற்பனைத் தினத்தில் தகுதியான குத்தகைக்காரர் தேர்ந்தெடுக்கப்படாது விட்டால் மறு விற்பனை 2024.06.25 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும்.

05- 320

---

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

### றெட்றிட்ஜ் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 76451) மற்றும் எல்ம் கிரீக் ( பிறைவேட்) லிமிட்டட் ( பீவீ 00217517) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

றெட்றிட்ஜ் (பிறைவேட்) லிமிட்டட் மற்றும் எல்ம் கிரீக் ( பிறைவேட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளரின் தீர்மானத்தின்படி, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கு அமைவாக றெட்றிட்ஜ் ( பிறைவேட்) லிமிட்டட் மற்றும் எல்ம் கிரீக் (பிறைவேட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தனி ஒரு நிறுவனமாக அதாவது றெட்றிட்ஜ் ( பிறைவேட்) லிமிட்டட் என்கின்ற பெயரில் தொடர்ந்து செயற்படும்.

மேற்படி ஒன்றிணைப்பானது கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் அனுமதியளிக்கப்படும் குறிக்கப்பட்ட திகதி ஒன்றிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது.

றெட்றிட்ஜ் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 76451) மற்றும்
எல்ம் கிரீக் (பிறைவேட்) லிமிட்டட் (பீவீ 00217517)
பணிப்பாளர்.

05-296

---

## பகிரங்க அறிவித்தல்

### ஜேபி செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் (பீவீ 20611)

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் 242(1) ம் பிரிவின் பிரகாரம் ஜேபி செக்கியூரிட்டிஸ‘ (பிரைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் 20611 ) நிறுவனத்தை ஜேபி கிரெடிட் (பிரைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் பீவீ 7675767) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் குறித்து முன்மொழியப்பட்ட விடயம் குறித்து அதே சட்டத்தின் பிரிவு 242 இன் உப - பிரிவு (3) இன் பிரகாரம் வெளியிடப்படும் பகிரங்க அறிவித்தல்

*2024.05.08 இல் இருந்து மேற்படி கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242(1) இன் ஏற்பாடுகளுக்கமைாக, ஜேபீ கிரெடிட் (பிரைவேட் லிமிடெட் நிறுவனப் பணிப்பாளர்கள் சபை மற்றும் ஜேபீ செக்கியூரிடிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனப் பணிப்பாளர்கள் சபை மற்றும் ஜேபீ செக்கியூரிட்டிஸ் ( பிரைவட்) லிமிட்டெட் நிறுவனம் பணிப்பாளர்கள் சபை ஆகியவை ஜேபீ கிரெடிட் ( பிரைவேட் ) லிமிடெட் நிறுவனத்தை ஜேபீ செக்கியூரிட்டிஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்துடன் ஒன்றிணைப்பதென தீர்மானித்ததன் பிரகாரம், ஜேபீ செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனமாகத் தொடர்ந்தும் இயங்கவுள்ளது. ஜேபீ செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஜேபீ கிரெடிட்( பிரைவேட்) லிமிடெட் நிறுவனங்களுக்கமைவாக சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் நாயகம் ஒருங்கிணைப்புச் சான்றிதழை வழங்கியதன் பேரில், இந்த அறிவித்தல் வெளியாகிய திகதியிலிருந்து 20 வேலை நாட்களுக்குக் குறையாத நாளொன்றில் குறித்த சட்டத்தின் பிரிவு 243 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஒருங்கிணைப்பு முன்மொழிவை கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் பதிவு செய்யும் பொருட்டு, குறித்த சட்டத்தின் பிரிவு 243 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஒருங்கிணைப்பு முன்மொழிவைத் தாக்கல் செய்தல் அமுலுக்கு வரும். ஜேபீ செக்கியூரிட்டிஸ் ( பிரைவெட்) லிமிட்டெட் மற்றும் ஜேபீ கிரெடிட் ( பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு அங்கீகரிப்பதற்கான தீர்மானங்களை குறித்த சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் அடிப்படையில் கருதக்கூடிய ஒருங்கிணைப்பு முன்மொழிவின் பிரதிகளை கம்பனியின் பங்குதாரர்கள் அல்லது கடன் வழங்குநர்கள் அல்லது கம்பனி கடமைப்பட்டுள்ள எவரேனும் நபர் சாதாரண வியாபார நேரங்களில் கொழும்பு 14, புனித ஜோசப் வீதி, இல. 150 எனும் முகவரியில் அமைந்துள்ள கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் பார்வையிடலாம். குறித்த நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது கடன் வழங்குநர் அல்லது குறித்த நிறுவனம் கடமைப்பட்டுள்ள எவரேனும் நபர், நிறுவனத்திடம் விடுக்கப்படும் கோரிக்கையின் பேரில், ஒருங்கிணைப்பு முன்மொழிவின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவார் .*

ஜேபீ செக்கியூரிட்டிஸ் ( பிரைவேட் ) லிமிடெட் நிறுவனப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) எஸ்.பீ.சிங்கசிறீவீர,
செயலாளர்.

*இல. 150,
புனித ஜோசப் வீதி,
கொழும்பு 14.*

*05-304*

---

**பகிரங்க அறிவித்தல்**

**ஜேபி கிரெடிட் (பிரைவேட்) லிமிடெட் பகிரங்க அறிவித்தல் (பீவீ 75767)**

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 242(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஜேபி கிரெடிட் (பிரைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் பீவீ 75767 ) நிறுவனத்தை ஜேபி செக்கியுரிட்டி (பிரைவேட்) லிமிடெட் ( கம்பனி பதிவிலக்கம் பீவீ20611) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் குறித்து முன்மொழியப்பட்ட விடயம் குறித்து அதே சட்டத்தின் பிரிவு 242 இன் உப - பிரிவு (3) இன் பிரகாரம் வெளியிடப்படும் பகிரங்க அறிவித்தல்.*

*2024.05.08 இல் இருந்து மேற்படி கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 242(1) இன் ஏற்பாடுகளுக்கமைாக, ஜேபீ கிரெடிட் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனப் பணிப்பாளர்கள் சபை மற்றும் ஜேபீ செக்கியூரிடிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனப் பணிப்பாளர்கள் சபை ஆகியவை ஜேபீ கிரெடிட் ( பிரைவேட் ) லிமிடெட் நிறுவனத்தை ஜேபீ செக்கியுரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் ஒன்றிணைப்பதற்கென தீர்மானித்ததன் பிரகாரம், ஜேபீ செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனமாகத் தொடர்ந்தும் இயங்கவுள்ளது. ஜேபீ செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஜேபீ கிரெடிட்( பிரைவேட்) லிமிடெட் நிறுவனங்களுக்கமைவாக சட்டத்தின் 244(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனிகள் பதிவாளர் நாயகம் ஒருங்கிணைப்புச் சான்றிதழை வழங்கியதன் பேரில், இந்த அறிவித்தல் வெளியாகிய திகதியிலிருந்து 20 வேலை நாட்களுக்குக் குறையாத நாளொன்றில் குறித்த சட்டத்தின் 243 ஆம் பிரிவில் இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஒருங்கிணைப்பு முன்மொழிவை கம்பனிகள் பதிவாளர் நாயகத்திடம் பதிவு செய்யும் பொருட்டு, குறித்த சட்டத்தின் பிரிவு 243 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் ஒருங்கிணைப்பு முன்மொழிவை தாக்கல் செய்தல் அமுலுக்கு வரும். ஜேபீ செக்கியூரிட்டிஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் ஜேபீ கிரெடிட் ( பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களின் ஒருங்கிணைப்பை அங்கீகரிப்பதற்கான தீர்மானங்களை குறித்த சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் அடிப்படையில் கருதக்கூடிய ஒருங்கிணைப்பு*

முன்மொழிவின் பிரதிகளை கம்பனியின் பங்குதாரர்கள் அல்லது கடன் வழங்குநர்கள் அல்லது கம்பனி கடமைப்பட்டுள்ள எவரேனும் நபர் சாதாரண வியாபார நேரங்களில் கொழும்பு 14, புனித ஜோசப் வீதி, இல. 150 எனும் முகவரியில் அமைந்துள்ள கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் பார்வையிடலாம். குறித்த நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது கடன் வழங்குநர் அல்லது குறித்த நிறுவனம் கடமைப்பட்டுள்ள எவரேனும் நபர், நிறுவனத்திடம் விடுக்கப்படும் கோரிக்கையின் பேரில், ஒருங்கிணைப்பு முன்மொழிவின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவார் .

ஜேபீ கிரெடிட் ( பிரைவேட் ) லிமிடெட் நிறுவனப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

(திருமதி) எஸ்.பீ.சிங்கசிறீவீர,
செயலாளர்.

இல. 150,
புனித ஜோசப் வீதி,
கொழும்பு 14.

05-305